செ.வெ.எண்: 29/மே நாள்: 14.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## தேர்தல் பணியில் ஈடுபடும் தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான வாக்குச்சாவடி மையங்களை தேர்வு செய்ய கணினி மூலம் குலுக்கல்

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மற்றும் தேர்தல் பொது பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்மான்,இ.ஆ.ப., திரு.ரமேஷ்வர்மா,இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக தேர்தல் பிரிவு கணினி அறையில் இன்று (14.05.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் பொது பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்மான்,இ.ஆ.ப., திரு.ரமேஷ்வர்மா,இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 தேர்தல் பணிகளில் ஈடுபடும் தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள் (Presiding Officer) மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான வாக்குச்சாவடி மையங்களை தேர்வு செய்ய கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization) நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல் தேர்தல் பணியில் ஈடுபடுவதற்காக பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் உள்ள 301 வாக்குச்சாவடி மையங்களுக்கு 28 மண்டல அலுவலர்களும், 301 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 918 வாக்குச்சாவடி அலுவலர்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதியில் உள்ள 321 வாக்குச்சாவடி மையங்களுக்கு 30 மண்டல அலுவலர்களும், 321 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 980 வாக்குச்சாவடி அலுவலர்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 321 வாக்குச்சாவடி மையங்களுக்கு 26 மண்டல அலுவலர்களும், 321 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 988 வாக்குச்சாவடி அலுவலர்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 364 வாக்குச்சாவடி மையங்களுக்கு 35 மண்டல அலுவலர்களும், 364 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 1108 வாக்குச்சாவடி அலுவலர்களும் ஆக மொத்தம் 119 மண்டல அலுவலர்களும், 1307 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 3994 வாக்குச்சாவடி அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மொத்தம் நான்கு கட்ட பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுள்ளது. தலைமை வாக்குச்சாவடி அலுவலர்கள் (Presiding Officer) மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான வாக்குச்சாவடி மையங்களை தேர்வு செய்ய கணினி மூலம் குலுக்கல் இன்று நடைபெற்றது. கணினி குலுக்கல் மூலம் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான வாக்குச்சாவடி மையங்கள் தேர்வு செய்யப்பட்டு 15.05.2016 (நாளை) அதற்கான பணி ஆணைகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.காமாட்சி கணேசன், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.ராஜசேகரன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**